செ.வெ.எண்:14-2020 நாள்:13.04.2020

**இன்று (13.04.2020) விழுப்புரம் நகராட்சி அலுவலகம் மற்றும் வளவனூர் பேரூராட்சி அலுவலகத்தில் கொரோனா வைரஸ் தடுப்பு பணிகளில் ஈடுபட்டுவரும் நகராட்சி தூய்மை பணியாளர்களுக்கு அரிசி மற்றும் அத்தியாவசிய மளிகை பொருட்களை மாண்புமிகு சட்டம், நீதிமன்றங்கள், சிறைச்சாலைகள் மற்றும் கனிமவளத்துறை அமைச்சர் திரு.சி.வி.சண்முகம் அவர்கள் வழங்கினார்.**

விழுப்புரம் நகராட்சி அலுவலகம் மற்றும் வளவனூர் பேரூராட்சி அலுவலகத்தில் கொரோனா வைரஸ் தடுப்பு பணிகளில் ஈடுபட்டுவரும் நகராட்சி தூய்மை பணியாளர்களுக்கு அரிசி மற்றும் அத்தியாவசிய மளிகை பொருட்களை மாண்புமிகு சட்டம், நீதிமன்றங்கள், சிறைச்சாலைகள் மற்றும் கனிமவளத்துறை அமைச்சர் திரு.சி.வி.சண்முகம் அவர்கள் வழங்கினார்.

இதனை தொடர்ந்து விழுப்புரம் மாவட்டத்தில் கொரோனா வைரஸ் நோய் தடுப்பு நடவடிக்கையின் பொருட்டு 144 தடை உத்தரவு அமல்படுத்தப்பட்டிருக்கும் காலங்களில் பொதுமக்களின் அன்றாட தேவைகளுக்கு அத்தியாவசியப்பொருட்களான காய்கறிகள் மற்றும் பழங்கள் தங்கு தடையின்றி கிடைத்திட வேளாண்மைத்துறையின் சார்பாக 198 நடமாடும் வாகனங்கள் மூலம் காய்கறி மற்றும் பழங்கள் விற்பனை செய்யப்பட்டுவருகிறது. மேலும் விவசாயிகளின் நலனுக்காக வேளாண்மைத்துறையிலிருந்து நடமாடும் உரம் விநியோகம், விதைகள் மற்றும் நுண்ணுயிர் உரங்கள் விநியோக சேவையினை மாண்புமிகு சட்டம், நீதிமன்றங்கள், சிறைச்சாலைகள் மற்றும் கனிமவளத்துறை அமைச்சர் திரு.சி.வி.சண்முகம் அவர்கள் துவக்கி வைத்தார்.

தொடர்ந்து விழுப்புரம் மாவட்டம் வளவனூர் பேரூராட்சி அலுவலகத்தில் கொரோனா வைரஸ் தடுப்பு பணிகளில் ஈடுபட்டுவரும் பேரூராட்சி தூய்மை பணியாளர்களுக்கு அரிசி மற்றும் அத்தியாவசிய மளிகை பொருட்களை மாண்புமிகு சட்டம், நீதிமன்றங்கள், சிறைச்சாலைகள் மற்றும் கனிமவளத்துறை அமைச்சர் திரு.சி.வி.சண்முகம் அவர்கள் வழங்கினார்.

இந்நிகழ்வினில் கொரோனா தடுப்பு பணி கண்காணிப்பு அலுவலர் முனைவர்.இல.சுப்பிரமணியன்.இ.ஆ.ப., மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.ஆ.அண்ணாதுரை.இ.ஆ.ப., கூடுதல் ஆட்சியர் (வருவாய்) திருமதி.ஸ்ரேயா.பி.சிங்.இ.ஆ.ப., மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் திரு.வெ.மகேந்திரன் மற்றும் துறை சார்ந்த அலுவலர்கள் உடனிருந்தனர்.

---

வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், விழுப்புரம்